**தலைப்பு 241 – பொது முயற்சிகள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 241 – பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஆகச்ட் 01 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது முயற்சிகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம்மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுகள் தொடர்பாக என்னால் வழங்கப்பட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

### 2.1.1 வருமான மதிப்பீடு தயாரித்தலின் பலவீனங்கள்

2015 ஜுன் 22 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி மற்றும் நிதிப் பிரமாணம் 142 இன் பிரகாரம் வருமான எதிர்வு கூறல் மற்றும் மதிப்பீடுகளை உரிய முறைப்படி தயாரிக்க நடவடிக்கை எடுத்திருக்காத சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------- | ------------------------- | ------------------- |
| **(அ)** | **வருமானக் குறியீட்டிலக்கம் 20:02:03:00 - இலாபம்** | | |
| (i) | 2023 ஆம் வருடத்திற்காக மதிப்பீட்டு வருமானம் ரூபா 41,669,457,000 ஆக காணப்பட்டதுடன் உள்ளவரான வருமானம் ரூபா 60,496,772,520 ஆக காணப்பட்டது. இது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் நூற்றுக்கு 145 அதாவது நூற்றுக்கு 45 அதிகரிப்பொன்றாகும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | வருமானத்தை சேகரித்துக் கொள்ள காணப்படும் நிறுவனங்கள் பற்றிய சரியான எதிர்வு கூரல்களை செய்து மிகவும் சரியாக வருமான மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டும். |
| (ii) | 10 பொது முயற்சிகளின் வருமானங்கள் மதிப்பீட்டுக்கு இணையாக உள்ளவாரான வருமானங்களின் குறைவு நூற்றுக்கு 3 மற்றும் 88 இடையிலான வீச்சளவில் காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | சரியாக கொள்கை ரீதியான தீர்மானம் எடுப்பதற்கும், வரவு செலவு திட்ட பற்றாக்குறை எவ்வளவு என தீர்மானிப்பதற்கும், மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகள் பகுப்பாய்விற்கும் வருமான எதிர்வு |

| | | | |
|---|---|---|---|
| | | | கூரல் மற்றும் வருமான சேகரிப்பு அறிக்கைகளை பேணிக் கொள்வதனை முறையாக்க வேண்டியமை. |
| (iii) | 08 பொது முயற்சிகளுக்கு உரிய இலாப வருமானங்கள் மதிப்பிடப்படாத போதிலும் அந்த முயற்சிகளில் இருந்து ரூபா 6,396 மில்லியன் இலாப வருமானம் ஒன்று கிடைக்கப்பெற்று இருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | -மேற்படி- |
| (iv) | 12 பொது முயற்சிகளில் இருந்து மதிப்பிடப்பட்ட இலாபம் வருமானத்தை விட கூடுதலான நூற்றுக்கு 25 இல் இருந்து 300 வரையான வீச்சில் இலாப அளவில் வருமானத்திற்கு பங்களிப்பு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | -மேற்படி- |
| (v) | வருமானக் குறியீடு - 20.02.03.00 (இலாபம்) கீழ் பங்களிப்புச் செய்யப்பட வேண்டிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் மேற்பார்வைக்கு உள்ளாக்கப்படுகின்ற நிறுவனங்கள் அவ்வாறெனில், 38 கூட்டுத்தாபனங்கள் மற்றும் 46 சட்டபூர்வமான நிறுவனங்கள் காணப்பட்ட போதிலும், 2023 ஆம் வருடத்தில் இலாபத்தின் கீழ் பங்களிப்பு செய்யப்படுகின்ற வருமானங்கள் மதிப்பிடுதல் தயாரிக்கப்படும் போது 34 நிறுவனங்கள் அவ்வாறானில் மொத்த அளவில் நூற்றுக்கு 40 அளவிலான வை உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரச முயற்சிகளில் இருந்து நூற்றுக்கு 60 இலாப வருமானத்திற்கு எவ்வித பங்களிப்பு ஒன்றும் பெற்றுக் கொள்ளப்படாமல் நிறுவனங்களாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. | வருமானங்கள் மதிப்பீட்டை தயாரிக்கும் போது இலாபங்கள் கிடைக்கப்பெறுகின்ற நிறுவனங்களை கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுவதோடு அவ்வாறு மதிப்பீட்டினுள் உள்ளடக்கப்பட்டுள்ள நிறுவனங்களிலும் வருடத்தினுள் உள்ளவாரான நிதி செயற்பாடுகளின் அடிப்படையாகக் கொண்டு மாறுபாடுகள் ஏற்படுவதற்கான நிகழ்த்தகவொன்று காணப்படுவதுடன் மதிப்பிடப்பட்டதன் பிரகாரம் பங்குலாப வருமானங்களை பெற்றுக்கொள்ள முடியாது உள்ளது. | -மேற்படி- |
| **(ஆ)** | **வருமானக் குறியீட்டிலக்கம் 20:02:04:00 - பங்கிலாப வருமானம்** | | |
| (i) | 2023 ஆம் வருடத்தில் பங்குலாப வருமானத்திற்காக மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 8,733,000,000 | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | சரியாக கொள்கை ரீதியான தீர்மானம் எடுப்பதற்கும், வரவு |

<table>
<tr><td></td><td>ஆக காணப்பட்டதுடன் உள்ளவாரான வருமானம் ரூபா 15,204,348,243 காரணமாக அது மதிப்பிடப்பட்ட வருமானத்தை விஞ்சி ரூபா 6,471,348,243 சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அது மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட நூற்றுக்கு 74 அதிகரிப்பொன்றாகும்.</td><td></td><td>செலவு திட்ட பற்றாக்குறை எவ்வளவு என தீர்மானிப்பதற்கும், மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகள் பகுப்பாய்விற்கும் வருமான எதிர்வு கூறல் மற்றும் வருமான சேகரிப்பு அறிக்கைகளை பேணிக் கொள்வதனை முறையாக்க வேண்டியமை.</td></tr>
<tr><td>(ii)</td><td>2022 ஆம் வருடத்திற்கு உரிய லாபத்திலிருந்து 03 பொது முயற்சிகளுக்கு ரூபா 134 மில்லியன் பங்குலாப வருமானம் ஒன்று மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற வேண்டியதாக மதிப்பிடப்பட்ட போதிலும் அந்த நிறுவனத்திடம் இருந்து மீளாய்வாண்டினுள் பங்கிலாப வருமானத்துக்கு எவ்வித பங்களிப்பொன்றும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.</td><td>கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் பொது திறைசேரியின் முதலீடுகள் உள்ள வேறு கம்பெனிகள் ஆவதுடன் நிதியாண்டின் 2024.03.31 ஆம் தேதியில் நிறைவடைகின்றது. அந்த நிறுவனங்களின் இடைக் கால பங்கு இலாபம் வெளியிடப்பட்டு அவை ஒன்றிணைந்த நிதியத்திற்கு மாற்றப்பட்டு உள்ளது. விபரங்கள் கீழ் வருமாறு.
<table>
<tr><th>நிறுவனம்</th><th>பங்கு இலாபம் (ரூபா)</th><th>அனுப்பப்பட்ட திகதி</th></tr>
<tr><td>தேசிய அபிவிருத்தி வங்கி</td><td>1,809,329</td><td>2024.04.19</td></tr>
<tr><td>கொமர்ஷியல் வங்கி</td><td>159,375</td><td>2024.04.08</td></tr>
<tr><td>De La Rue Lanka (Pvt) Ltd</td><td>1,324,040,000</td><td>2024.01.29</td></tr>
</table></td><td>-மேற்படி-</td></tr>
<tr><td>(iii)</td><td>04 பொது முயற்சிகளிலிருந்து பங்கிலாப வருமான மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில், உள்ளவாறான வருமான பெறுவனவுகளின் குறைவு நூற்றுக்கு 47 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையான வீச்சளவினைக் கொண்டிருந்தது.</td><td>இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் மக்கள் வங்கி<br><br>2023 பெப்ரவரி 02 ஆம் திகதிய இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் இலக்கம் 01, 2023 ஆக வங்கிச் சட்டத்திற்கு அமைவாக வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் 2023 ஆம் வருட நிதி கூற்றுகள்</td><td>-மேற்படி-</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | தயாரிக்கப்பட்டு அவை கணக்காய்விற்குற்படுதல் நிறைவடையும் வரை 2023 ஆம் வருடத்திற்குரிய இலாபம் அல்லது பங்குலாப அறிக்கையிடலை தவிர்ந்து கொள்ளுமாறு அறிவுரை வெளியிடப்பட்டுள்ளது.<br><br>இலங்கை டெலிகொம் இன் பங்கு ஒன்றின் ஈட்டுதல் குறைந்திருந்ததன் அடிப்படையில் கம்பனியினால் கூறப்பட்ட பங் கொண்டிற்காக பங்கு இலாபத்தின் அளவு குறைந்திருந்தது. அதன் பிரகாரம் பங்கு இலாப வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட குறைந்திருந்தது. | |
| (iv) | 13 தொழில் முயற்சிகளில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு மதிப்பிடப்பட்ட பங்குஇலாப வருமானத்தை விஞ்சி நூற்றுக்கு 33 இல் இருந்து நூற்றுக்கு 2,500 வரையான வீச்ச அளவுகளில் பங்குஇலாப வருமானத்துக்கு பங்களிப்பிடப்பட்டுள்ளது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | -மேற்படி- |
| (v) | மதிப்பிடப்பட்ட பங்குஇலாப வருமானத்துக்கு உள்ளடக்கப்படாத 4 பொது முயற்சிகளில் இருந்து் மீளாய்வாண்டினுள் வருமானத்திற்கு ரூபா 7,131.2 மில்லியன் அளவில் பங்களிப்பிடப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | -மேற்படி- |
| (இ) | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், அரச வியாபார திணைக்களத்தின் மேற்பார்வைக்கு உள்ளாக்கப்படும் 50 அரச கம்பனிகள் காணப்பட்ட போதிலும், முறைமையான முக்கியமான பொது முயற்சிகளின் கீழ் 16 அரச கம்பனிகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய அரச கம்பனிகள் தொடர்பாக மேற்பார்வை கீழ் மட்டத்தில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | இலங்கையின் பொருளாதார மேம்பாட்டுக்கு பெரும் பங்களிப்பு ஒன்றை பெற்றுக் கொடுக்கும் மற்றும் மூலோபாய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பொது முயற்சிகளை மாத்திரம் முறைமையான முக்கியமான பொது முயற்சிகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | அரச வியாபார திணைக்களத்தின் விடய பரப்பிற்கு உள்ளாகும் அனைத்து அரச கம்பனிகள் சம்பந்தமாகவும் முறையாக மேற்பார்வை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆரம்ப செலவுகள் மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட செலவுகள் மதிப்பீடுகளுக்கு இடையில் இணக்கம் செய்யும் போது செலவின விடயங்கள் 14 க்கு உரிய வேறுபாடு நூற்றுக்கு 40 ஆன குறைவிலிருந்து நூற்றுக்கு 326 ஆன அதிகரிப்பு வரையான வீச்சினுள் வேறுபாடு காணப்பட்டது. | பின்வரும் விடயங்கள் காரணமாகியுள்ளன<br>• பாதீட்டு சுற்று நிருப இலக்கம் 02/2023 ஆம் பிரகாரம் செலவுகள் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்படுதல்.<br>• அரச நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 14/2022 ஆம் பிரகாரம் பதவி அணியினரின் உத்தியோகத்தர் சம்பளமற்ற தேசிய மற்றும் வெளிநாட்டு விடுமுறைகளை பெற்றுக் கொள்ளுதல்.<br>• அதிவேகப் பாதை நுழைவுக் கட்டணம் அதிகரித்தல் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு கல்வி சுற்றுலா மற்றும் பயிற்சி சந்தர்ப்பங்கள் கிடைக்க பெற்றுள்ளதுடன், மதிப்பீடு தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட வெளிநாட்டு நாணயமாற்று பெறுமதியை விட செலவுகள் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு நாணயமாற்று வீதம் அதிகரித்தல் காரணமாக மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் போதுமானதாக இல்லாமை.<br>• வாகனங்கள் மற்றும்இயந்திரங்களின் உதிரிப் பாகங்களின் விலை அதிகரித்தல் மற்றும் தவணை சேவை கட்டணம் மற்றும் திருத்த வேலைகள் சேவை கட்டணம் முன்னைய வருடத்திற்கு இணையாக அதிகரித்தல் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தை விட இந்த வருடத்தினுள் உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகளுக்காக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் முடியுமான வரை சரியாக மதிப்பீடுகளை தயாரித்துக் கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| | போக்குவரத்துக் கொடுப்பனவுக்கான தகுதியுடைய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அதிகரித்தல் காரணமாக ஏற்பாடுகள் போதுமானதாக இல்லாமை.<br><br>• தபால், தொலைபேசி மற்றும் இணைய வசதிகளுக்கு உரிய கட்டணங்கள் அதிகரித்தலின் அடிப்படையில் ஏற்பாடு போதுமானதாக இல்லாமை.<br><br>• முன்னைய வருடத்தின் ஏற்பாடுகள் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படாததன் காரணமாக கொடுப்பனவுக்கு முடியாது போயிருந்த நிலுவை வீத வரி குத்தகை இந்த வருடத்தினுள் செலுத்துவதற்கு நேர்ந்தமை.<br><br>• இந்த திணைக்களத்துக்கு சொந்தமான போதுமான வாகனத் தொகுதி ஒன்று இல்லாமை காரணமாக செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் வாகனங்களை பெறுகை அடிப்படையில் பெற்றுக் கொள்ள நேர்ந்தமை.<br><br>• ஒரு சில பொது முயற்சிகளின் செயற்பாட்டு மூலதன சிக்கல்களை தீர்ப்பதற்கு ஒரு சில பொது முயற்சிகளில் காணப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகளில் சட்ட ரீதியான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுதல். | |
| (ஆ) மீண்டெழும் செலவு விடயங்கள் 6 மற்றும் மூலதன செலவு விடயங்கள் 02 காக மிகை ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக அந்த ஏற்பாடுகள் வருடத்திற்குள் பயன்படுத்தப்பட்ட பின்னர் ரூபா 50,125,840,726 ஆன சேமிப்பு ஒன்று காணப்படுவதுடன், அந்த சேமிப்பு தேறிய ஏற்பாடுகளின் நூற்றுக்கு 7 இல் இருந்து நூற்றுக்கு 48 இடையிலான வீச்சலவான சதவீதத்தில் காணப்பட்டது. | பின்வரும் விடயங்கள் காரணமாய் இருந்தன.<br>• அரச நிர்வாக சுற்று நிருபம் 14/2022 ஆம் இலக்கத்தின் பிரகாரம் பதவியணி உத்தியோகத்தர்களின் சம்பளமற்ற தேசிய மற்றும் வெளிநாட்டு விடுமுறைகள் பெற்றுக் கொள்ளல். | -மேற்படி- |

- பாதீட்டு சுற்று நிருபம் 02/2023 இன் பிரகாரம் செலவுகள் கட்டுப்படுத்தப்படவும்.
- பாதீட்டு சுறறு நிருபம் 01/2023 இன் பிரகாரம் மீண்டெழும் ஏற்பாடுகள் நூற்றுக்கு ஆறு விகிதத்தால் சேமிக்கப்பட்டிருத்தல்.

- தேசிய நீர் வளங்கள் மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் தேசிய கடன் மற்றும் வெளிநாட்டு கடன் மறு சீரமைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அது அவ்வாறு இடம் இடம்பெறாமை.

- இலங்கை மின்சார சபையின் ஐந்தொகை மறுசீரமைப்புக்காக ரூபா 129 பில்லியன் ஆன மூலதன பங்களிப்பை பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனத்திற்கு கிடைப்பதற்கு இருந்த 697 மில்லியன் டாலர் கடன் தொகை இல் ரூபாவுக்கு பெறுமதியில் இலங்கை மின்சார சபைக்கு எதிர்பார்க்கப்பட்ட மொத்த மூலதன பங்களிப்பை பெற்றுக் கொடுப்பதற்கு முடியாமல் போனமை.

- கொழும்பு தாமரை கோபுர முகாமைத்துவ கம்பனியின் செலவுகளை மேற்கொள்வதற்காக நிறுவனத்திடம் காணப்படும் பணத்தின் அளவு போதுமானதாக உள்ளதுடன் மூலதன பங்களிப்பொன்றை பெற்றுக் கொடுக்கும் தேவை பாடொன்று காணப்படாமை.
- நோத் சி கம்பனியின் சட்ட ரீதியான கொடுப்பனவை தீர்ப்பனவு செய்யும் நடவடிக்கைகளுக்கான நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்ற வழக்கு நடவடிக்கைகள் நிறைவடையாமை.

| | | | |
|---|---|---|---|
| | | • இலங்கை அரச தோட்ட கம்பனிக்கு போதுமான அளவு கட்டு நிதி கிடைக்கப் பெறாமை. | |
| (இ) | 2023 ஜனவரி 27 ஆம் திகதிய 01/2023 ஆம் இலக்க பாதீட்டு சுற்று நிருபத்தின் 2(இ)(iii) பந்தியின் பிரகாரம், செலவு விடயம் 1003 -ஏனைய கொடுப்பனவுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளும் குறைந்த அளவு நூற்றுக்கு 06 ஆக குறைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அந்த செலவு விடயத்தின் கீழ் சேமிப்பு ரூபா 1,106,269 மாத்திரம் காணப்பட்டதுடன், அது தேறிய ஏற்பாடுகளின் சதவீதமாக நூற்றுக்கு 4 ஆகும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் ஆரம்ப மதிப்பீட்டின் ஊடாக ஏற்பாடுகள் ஒதுக்கப்படாத 13 செலவு விடயங்களுக்காக குறை நிரப்பு மதிப்பீட்டு ஏற்பாட்டின் மூலமாக கூட்டு மொத்தம் ரூபா 114,533,109,879 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | நிதிப்பிரமாணம் பிரகாரம் முடியுமான அளவிற்கு சரியாக மதிப்பீடுகளை தயாரிக்க வேண்டும். |

## 2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நி.பி.94(1) இன் பிரகாரம், திணைக்களத்தினால் சேவை ஒன்று அல்லது விநியோகம் ஒன்றிற்காக வருடாந்த மதிப்பீடுகளில் அதற்கான நிதி ஏற்பாடுகளை விஞ்சி எந்த ஒரு செலவுக்கு அல்லது கடப்பாட்டுக்கு கடப்பாடாக கூடாத போதிலும், செலவு விடயம் 241-1-1-1402 இன் கீழ் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது ஏற்பாடு சேமிப்பு ரூபா 64,590 ஆக காணப்பட்ட போதிலும், அந்த சேமிப்பை விஞ்சி ரூபா 27,857 க்கு பொறுப்புக்கு கடப்பாடாகி இருந்தது. | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் ஏற்பாட்டு எல்லையை விஞ்சி கடப்பாடுகளுக்கு முற்படுதலை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 2022/02 இன் 10 ஆம் பந்தி மற்றும் 2018 இன் இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16(2) பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டிய போதும், அரச பொது முயற்சிகள் திணைக்களத்தினால் 2023 ஆண்டின் வருடாந்த அறிக்கையை 2024 பெப்ரவரி 28 ஆம் தேதி வரையும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையையும் சமர்ப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 மே 22 ஆம் திகதி நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட இலக்கம் 1550/7 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் 7 பந்தியின் பிரகாரம், இலங்கையிலிருந்து ஆரம்பிக்கும் விமான பிரயாணங்களுக்கு இலங்கைக்கு வெளியில் விநியோகிக்கப்படும் அல்லது விற்கப்படும் ஒவ்வொரு பயணிகள் பிரயாணச் சீட்டு தொடர்பாகவும் அவ்வாறான பயணச் சீட்டுகள் விற்பனை செய்யப்படும் முறை மற்றும் அல்லது விநியோகத்தினை கவனத்திற் கொள்ளாது ஐ.அ.டொ 60 ஆன மிகை அறவீடொன்றை அல்லது அதற்கு சமமான தொகையை அறவிட வேண்டிய போதும், அந்த வர்த்தமானியின் 8 பந்தியின் பிரகாரம் அவ்வாறு திரட்டப்படும் மிகை அறவீட்டுத் தொகையை சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படுவதன் பிரகாரம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, 2008 ஆகஸ்ட் 01 முதல் 2023 திசெம்பர் 31 வரை சிவில் விமானப் | அமைச்சரவை பத்திரம் இலக்கம் CP/24/0226/628/015 ஆன “இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் செலவுகளுக்காக நிதியத்தை விநியோகித்தல்’’ என்ற அடிப்படையில் துறைமுக விமான போக்குவரத்து மற்றும் கடற்படை அமைச்சர் சமர்ப்பித்த 2024.01.30 ஆம் திகதிய விஞ்ஞாபனத்திற்கு இணங்க 2023.12.19 ஆம் தேதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் தற்போதும் 2023 நவம்பர் மாதத்தில் இருந்து 2024 மார்ச் மாதம் வரை வெளிநாட்டு விற்பனை மிகை வருமானமான ரூபா 1,766,269,517 ஆன தொகையிலிருந்து ரூபா 393,000,000 ஆன தொகை ஒன்று தடுத்து வைக்கப்பட்டதன் | திணைக்களத்தின் முக்கிய பணிகளான வருமானம் சேகரிப்பது தொடர்பாக முறையான திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்த வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| போக்குவரத்து அதிகாரசபையினால் அந்த மிகை அறவீடாக ரூபா 22,113 மில்லியனை சேகரித்திருந்த போதும், அத் தொகையை திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்திருக்கவில்லை. மேலும், இது தொடர்பாக 2017 ஜூன் 12 திகதி சட்ட விவகாரங்கள் திணைக்களத்தினால் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அபிப்பிராயமான ”இந்த மிகை அறவீட்டை தொடர்ந்தும் அறவிடும் வல்லமை காணப்படுவதாகவும், அந்த மிகை அறவீட்டுத் தொகையை திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கும் சட்டப்பூர்வ கடப்பாடொன்று உள்ளதாகவும்'' குறிப்பிட்டு 2017 ஏப்ரல் 07 திகதிய சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழங்கப்பட்ட கடிதத்துடனும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினை அறிவுறுத்தப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வு திகதியிலும் இந்த மிகை அறவீட்டுத் தொகையை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையிடமிருந்து அறவிட பொது முயற்சிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை. | பிரகாரம் ரூபா 1,373,269,517 ஆன தொகை ஒன்று திரண்ட நிதியத்திற்கு 2024.05.10 ஆம் திகதி செலவு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த வருமானம் இரண்டு வாரங்கள் படியாக இரண்டு காலாண்டுகளுக்கு விமான போக்குவரத்து நிறுவனங்களிடமிருந்து அறவிடப்படுவதுடன் இரண்டாவது காலாண்டுக்கான பணம் பெறப்பட்டது அடுத்து வருகின்ற மாதத்தின் 15 ஆம் திகதியிலேயே என்பதுடன் அதன் பிரகாரம் எதிர்வரும் மாதங்களுக்குரிய பணம் கிடைத்தல் அந்த மாதம் நிறைவடைந்து அடுத்து வருகின்ற மாதத்தின் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் தலைவரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | |

**(ஆ) மூலதன பங்களிப்பு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2023 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போது அரசினால் மூலதன பங்களிப்பாக ரூபா 1,124,665,353,761 விநியோகிக்கப்பட்டிருந்த 13 பொது முயற்சிகளுக்கு 2022 டிசம்பர் 31 ஆம் தேதி அந்த பெறுமதி ரூபா 1,047,966,900,772 ஆக காணப்பட்டதுடன், அந்த நிறுவனங்களின் நிதி கூற்றின் பிரகாரம் 2022 டிசம்பர் 31 ஆம் தேதி அவற்றின் தேறிய சொத்துக்கள் (மொத்த சொத்துக்கள்- மொத்த வெளிவாரி பொறுப்புக்கள்)இன் பெறுமதி மறையாக ரூபா 630,632,144,273 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் அரசின் நிதி கூற்றுக்களில் நிதிச் சொத்துக்களின் கீழ் அந்த மூலதன பங்களிப்புக்கள் காட்டப்பட்டிருந்த போதிலும் அதன் பெறுமதி முழுமையாக | பொது முயற்சிகளில் நீண்டகால கடன் உள்ளடங்களாக வெளிவாரி பொறுப்புக்கள் மொத்த தேசிய உற்பத்திகளில் நூற்றுக்கு 7 மாத்திரமே ஆகும். இதற்கு பிரதானமான காரணமாக பொது முயற்சிகளின் கிரய பிரதிபலிப்பு விலை முறைமையின்மை சந்தை விலை இக்கு பதிலாக மானிய விலை முறைக்கு பொருட்கள் விநியோகிக்கப்படும்போது அதன் கிரயம் நேரடியாக அரச நிதி மானியத்தின் ஊடாக நிதி அளிக்கப்படாததால் தொடர்ந்து பொது முயற்சிகளினால் நட்டத் தன்மையிலான நிலைமை அறிக்கை விடப்படுதல், அதன் நட்டங்கள் அரச வங்கிகளின் ஊடாக நிதியளிப்பு | அரச உரிமை உடைய நிறுவனங்களின் நிதி நிலைமை கால ரீதியாக மதிப்பிடுதலுக்கு உட்படுத்தப்பட்டு அவற்றின் பெறுமதிகளின் குறைபாடுகள் அரச நிதி கூற்றுக்களினுள் முறையாக உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகி (impairment), உரிய நிறுவனம் முற்றிலும் வெளிவாரி பொறுப்புகளின் கீழ் பேணப்பட்டு வருகின்ற நிலைமைக்கு தள்ளப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது. மேலும் அதற்கான ஆரம்ப விடயமாக தாக்கம் செலுத்தி இருந்தது உரிய நிறுவனத்தின் நட்டம் பெறுவதின் காரணமாக தடுத்து வைக்கப்பட்ட இலாபம் மறை பெறுமதி ஒன்று மேற்கொண்டிருப்பது மேலும்அவதானிக்கப்பட்டது. | மேற்கொள்ளப்படுவதுமாகும். இதேவேளை, பெட்ரோலிய கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, ஸ்ரீலங்கன் எயாலைன்ஸ் ஆகிய மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த பொது முயற்சியாளர்கள் தொடர்ந்து அறிக்கை படுத்தப்படுகின்ற நட்ட நிலைமைகள் அரச வங்கிகளின் ஊடாக நிதியளிக்கப்படுதல் சென்ற வருடங்களில் குறிப்பிடத்தக்க நடைமுறையாக காணப்பட்டது.<br><br>இதற்கு மேலதிகமாக அரசின் கொள்கைகளின் தீர்மானங்கள் தாக்கமும் மேற்குறித்த நிலைமை வழிவகுப்பதற்கு காரணமாக இருந்தது. | |
| (ii) | 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 1,019,627,985,708 மற்றும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 892,034,785,542 ஆன அரச மூலதன பெறுமதியுடன் ஆன 05 பொது முயற்சிகளின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 371,771,137,033 மாத்திரமாகும். அதன் பிரகாரம் இந்த பொது முயற்சிகளில் முதலிடப் பட்டுள்ள மூலதன பங்களிப்பின் பெறுமதி துஷ்பிரயோகத்துக்கு (impairment) உள்ளாக்கப்பட்டு வருவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- | அரச உரிமை யுடைய நிறுவனங்களின் நிதி நிலைமை கால ரீதியாக மதிப்பிடுதலுக்கு உட்படுத்தப்பட்டு அவற்றின் பெறுமதிகளின் குறைபாடுகள் அரச நிதி கூற்றுக்களினுள் முறையாக உள்ளடக்கப்பட வேண்டும். |
| (iii) | 2022 டிசம்பர் 31 ஆம் தேதி உள்ளவாரான அரச் நிதிக் கூற்றின் பிரகாரம் பொது முயற்சிகளுக்கான மூலதன பங்களிப்பின் பெறுமதி ரூபா 2,165,981,657,905 ஆக காணப்பட்டதுடன், அதில் ரூபா 2,121,653,720,125 அரச கூட்டு தாபனம், சட்டவாக்கு சபை மற்றும் அரசுக்கு சொந்தமான கம்பனிகளில் முதலிடப்பட்டிருந்தது.<br>ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது அரசுக்கு சொந்தமான இந்த வியாபார நிறுவனங்களின் தேதிய சொத்துக்களின் மொத்த பெறுமதி 2022 டிசம்பர் 31 ஆம் தேதி ஆகும் போது ரூபா 1,669,676,388,290 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் மேற்குறித்த மூன்று வகைகளுக்கும் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | உரிய அரசின் மூலதன பங்களிப்பு அந்த நிறுவனங்களின் தேறிய சொத்துக்களுக்கு இணையாக நூற்றுக்கு 21 நாள் அவ்வாறெனில் ரூபா 451,977,331,835 ஆள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (iv) | 2022 ஆம் வருடத்தினுள் அரசினால் முதலீடு செய்யப்பட்டுள்ள 32 சட்ட வாக்க சபைகளுக்குரிய ரூபா 117,718,706,426 ஆன தேதிய இலாபம் ஒன்று ஈட்டப்பட்டிருந்த போதிலும், 36 அரச கூட்டு ஸ்தாபனங்கள் மற்றும் 30 அரசுக்கு சொந்தமான கம்பனிகளுக்குரிய முறையே ரூபா 804,795,113,607 மற்றும் ரூபா 133,722,486,417 ஆக மொத்தம் ரூபா 938,517,600,024 ஆன தேறிய நட்டம் ஈட்டப்பட்டதன் காரணமாக இந்த 98 நிறுவனங்களுக்குரிய மொத்தமாக ரூபா 820,798,893,548 தேறிய நட்டம் ஒன்று ஈட்டப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை பிரகாரம் 2022 ஆம் வருட மத்திய வருடாந்த சராசரி ஆண்டு மக்கள் தொகை 22,181,000 ஆக காணப்படுவதுடன், அதன் பிரகாரம் அரசுக்கு சொந்தமான 98 வியாபார நிறுவனங்களுக்காக 2022 ஆம் வருடத்துக்காக செலவிடப்பட்டுள்ள தனிநபர் தேறிய நட்டம் ரூபா 37,000 காணப்படுவது மேலும் அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (v) | 2022 ஆம் வருட இறுதியாகும் போது 17 பொது முயற்சிகளுக்கு உரிய நடைமுறை விகிதம் பலவீனமாக காணப்பட்டது. விசேடமாக இலங்கை விமான கம்பனியின் நடைமுறை விகிதம் 0.15 என்ற மிகவும் பலவீனமான தொகை ஒன்று அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், இந்த பொது முயற்சிகள் திரவத்தன்மை நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய கூடிய அபாயம் ஒன்று காணப்படுவதாக மேலும் அவதானிக்கப்பட்டது. | பொது திறைசேரிக்கு உரிய பொது முயற்சிகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்காக காணப்படுகின்ற நிதி சாத்திய வளம் மிகவும் வரையறைக்குட்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொது முயற்சிகளுக்கு தொழிற்படு மூலதனத் தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கு வங்கி மூலாதாரங்களுக்கு நுழைய வேண்டிய தேவை ஏற்படுகிறது. அதன் பிரகாரம் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய கடன் தவணை மற்றும் வட்டி | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | அதிகரித்தல் அடிப்படையில் நடைமுறை பொறுப்பும் நடைமுறை சொத்துக்களுக்கு இணையாக கூடிய தொகை எடுக்கப்பட்டிருந்தது. அதனால், உரிய பொது முயற்சிகளின் குறுகிய கால பொறுப்புக்களை தீர்ப்பதற்காக திரவத்தன்மையான சொத்துக்கள் போதுமான நிலையில் காணப்படவில்லை. எவ்வாறாயினும் ஸ்ரீ லங்கன் விமான கம்பெனிக்கு அந்த பொறுப்புக்கள் மேலும் செலுத்த முடியாதது அவதானிக்கப்பட்டதுடன், சாத்தியமான முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக அமெரிக்க டாலர் 210 மில்லியன் மற்றும் அமெரிக்க டாலர் 100 மில்லியன் ஆன பொறுப்புக்களை அரசுக்கு உரித்தாக்கிக் கொள்வதன் மூலம் அதன் ஐந் தொகை மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. | |
| (vi) | 2022 ஆம் வருட இறுதியில் போது 16 பொது முயற்சிகள் தொடர்பாக மிகை மூலதன தேர்வு விகிதம் நிலைமை ஒன்று அவதானிக்கப்பட்டது. இங்கு ஒரு சில நிறுவனங்களின் அரச மூலதனத்தை விட செலுத்துவதற்கு உள்ள நீண்ட கால கடன்கள் கூடிய தொகை ஒன்றை பெற்றிருந்தது. மேலும் அரச மூலதனங்களின் பங்களிப்புகள் மறைத்தொகை ஒன்றை எடுத்திருந்தது பொது முயற்சிகளிலும் அவதானிக்கப்பட்டதுடன் அந்த நிறுவனங்களின் முழுமையான நீண்ட கால கடனின் மூலம் நிதியளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த அனைத்து நிறுவனங்களிடம் கூடுதலான நிதி அபாயம் ஒன்று (Financial Risk) மற்றும் தொடர்ந்து இயங்கும் தன்மை மிகவும் மோசமான அபாயம் ஒன்றுக்கு முகம் கொடுப்பதற்கு நேர்ந்து உள்ளதாக மேலும் அவதானிக்கப்பட்டது. | இந்த பொது முயற்சிகளின் செயற்பாட்டு நடவடிக்கை பேணி செல்வதற்காக தேவையான தொழிற்படு மூலதனம் வங்கிகள் ஊடாக பெறப்படுகின்ற நீண்ட கால கடனின் மூலம் நிதி இடலின் மூலம் மிகை தேர்வு விகிதம் நிலைமைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. ஒரு சில பொது முயற்சிகளுக்கு வங்கி கடன் உரிய கால எல்லையினுல் சேவைக்கு உட்படுத்தப்படுவதில் தவறி இருந்ததன் காரணமாக கடன் கொடுத்தோர்களின் இணக்கப்பாட்டுடன் கடன் மறு சீரமைப்பு மேற்கொள்வதற்கும் நேர்ந்தது. அரசுக்கு சொந்தமான வரையறுக்கப்பட்ட நிதி சூலலின் போது பொது முயற்சிகளின் காணப்படுகின்ற மூலதன கஷ்டங்களுக்காக நிதி உதவி ஒன்றை பெற்றுக் கொடுப்பது கடினமான போதும் 2023 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மீள் புனரமைப்பின் மூலம் முயற்சிகளில் காணப்பட்ட மிக மிகை தேர்வு விகிதம் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | சுமூகமான நிலைமைக்கு கொண்டு வருவதற்கு முடியுமாக இருந்தது. | |
| (vii) | 8 பொது முயற்சிகளின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட நேரடி மீதியை உறுதிப்படுத்தலின் பிரகாரம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாரு அந்த நிறுவனங்களின் அரச மூலதன பங்களிப்பு ரூபா 10,803 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் அரச நிதி கூற்றின் பிரகாரம் அந்த மீதி ரூபா 4,323 மில்லியன் ஆக காணப்பட்டதனால் 2023 டிசம்பர் 31 ஆம் தேதியில் உள்ளவாரான அரசின் நிதி கூற்றினுள் மூலதன பங்களிப்பு ரூபா 6,480 மில்லியன் குறைவாக காட்டப்பட்டுள்ளது. | அரசின் நிதிக்கூற்றின் பிரகாரம் மீதி மற்றும் நேரடி மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் மீதிகளுக்கு இடையில் காணப்படுகின்ற இந்த வேறுபாடுகள் எங்களாலும் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வேறுபாடு ஏற்படுவதற்கு தாக்கம் செலுத்திய விடயங்கள் எதுவென அடையாளம் காண்பதற்காக தேவையான நடவடிக்கைகள் தற்போதும் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் உரிய வேறுபாடுகள் முறையாக அடையாளம் காணப்பட்டு பிறகு முறையான அங்கீகாரத்துடன் பிரதான பேரேட்டு கணக்குகளில் அறிக்கை படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக. | அரசின் உரிமைத்துவம் காணப்படுகின்ற நிறுவனங்களுடன் காலத்தினுடனான மீதியை உறுதிப்படுத்திக் கொண்டு மதிப்பீட்டுக்கு உட்படுத்தி முறையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மற்றும் கணக்குகளின் துல்லிய தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (viii) | 9 பொது முயற்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட நேரடி மீதியை உறுதிப்படுத்தலின் பிரகாரம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் அந்த நிறுவனங்களின் மூலதன பங்களிப்பு ரூபா 994,992 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் அரசின் நிதிக் கூற்றின் பிரகாரம் அந்த மீதி ரூபா 995,171 மில்லியன் ஆக காணப்பட்டதன் காரணமாக அரச நிதிக்கூற்றினுள் மூலதன பங்களிப்பு ரூபா 179 மில்லியன் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி - | -மேற்படி- |
| (ix) | 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட நேரடி மீதியை உறுதிப்படுத்தல் மற்றும் அரச நிதி கூற்றுக்களிடையில் 09 நிறுவனங்களுக்கு உரிய அரசுக்கு சொந்தமான பங்கு எண்ணிக்கைகளில் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் அரச மூலதன பங்களிப்பு ரூபா 135 மில்லியன் குறைவாக அரச நிதி கூற்றினுள் கணக்கிடப்பட்டிருந்தது. | இங்கு குறிப்பிடப்பட்ட கம்பனிகளின் மூலம் பங்கு வெளியிடப்பட்டு அதற்குரிய பங்கு சான்றுறுதி பத்திரம் இதுவரை எங்களுக்கு கிடைக்கப்பெற்று இருக்கவில்லை என்பதுடன் அவை கிடைத்தவுடன் உரிய சீர் செய்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (x) | Sri Lanka Institute of Biotechnology (Pvt) Ltd நிறுவனத்திடம் இருந்து கிடைக்கப்பெற்ற நேரடி மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் 2023 டிசம்பர் 31 ஆம் தேதியில் பங்கு ஒன்றின் விலை ரூபா 10 ஆன 52,472,573 பங்குகள் பொது திறைசேரியிடம் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அரச நிதி கூற்றினுள் குறிப்பிடப்பட்டிருப்பது பங்கு ஒன்றின் விலை ரூபா 100 ஆன 200,000 பங்குகளின் மூலதன பங்களிப்பு ஒன்று காணப்படுவதாக ஆகும். அதன் பிரகாரம் 2023 டிசம்பர் 31ஆம் தேதி அந்த நிறுவனத்தின் மூலதன பங்களிப்பு அரச நிதி கூற்றில் ரூபா 504,725,732 வால் குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது. | Sri Lanka Institute of Biotechnology (Pvt) Ltd க்கு உரிய வரைவு அமைச்சின் செலவு தலைப்பின் உரிமை மூலதன செலவு விடயத்தின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள மூலதன பங்களிப்பு பிரதான பேரேட்டு கணக்குகளில் அறிக்கை படுத்தப்படாததன் காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளதுடன் இந்த வருடத்திற்குள் உரிய அறிக்கையிடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதாக. | -மேற்படி- |
| (xi) | 02 அரச கமபனிகளின் உரிமைத்துவம் காணப்படுகின்ற பங்குகளின் எண்ணிக்கை மற்றும் அதன் பேர ளவிலான பெறுமதிகளின் பிரகாரம் கணக்கிடும்போது 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் பங்குகளின் பெறுமதி ரூபா 5,141 ஆக காணப்பட்டதுடன் அது அரச நிதிக்கூற்றினுள் ரூபா 14,476 மில்லியன் ஆக காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான அரச நிதி கூற்றுக்களின் பங்குகளின் பெறுமதி ரூபா 9,335 மில்லியனினால் கூடுதலாக மூலதன பங்களிப்பு காட்டப்பட்டிருந்தது. | Bogala Graphite Lanka PLC இல் பங்குகள் மூலதன கணக்கிடுதல் மேற்கொள்ளும் போது தவறு ஒன்று இடம்பெற்று இருப்பதாக அவதானிக்கப்பட்டது. உரிய கணக்கிடுதல் சீர் செய்யப்படுவதற்கு குறிப்பிடப்பட்டுக் கொண்டது.<br><br>மிஹின் லங்கா (தனியார்) கம்பனிக்கு 2021 மற்றும் 2022 ஆகிய வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட மூலதன பங்களிப்புக்குரிய பிரதான பேரேட்டு கணக்குகளில் குறிப்பிடப்பட்ட போதிலும் அதற்கான பங்கு சான்றிதழ் வெளியிடுதல் இடம் பெற்றிருக்கவில்லை. எவ்வாறாயினும், உரிய நிறுவனத்துக்கு உரிமை மூலதனமாக பெற்றுக் கொடுக்கப்பட்ட தொகை உரிய பிரதான பேரேட்டுக் கணக்குகளில் அறிக்கை இடப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (xii) | அரச நிதிக் கூற்றின் பிரகாரம் மீளாய் வாண்டினுள் அரசுக்கு உரித்தான வியாபாரங்களில் இருந்து மூலதன பங்களிப்பின் அதிகரிப்பு ரூபா 241,651 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், அதில் ரூபா 34,090 மில்லியன் அவ்வாறெனில் நூற்றுக்கு 14 ஆன | இந்த நிறுவனங்கள் அனைத்தினதும் முழுமையான உரிமை பொது திறைசேரிக்கேயாகும். அதன் பிரகாரம், அந்த நிறுவனங்களில் காணப்படுகின்ற தொழிற்படு மூலதன பிரச்சினைகள் அல்லது | மீண்டெழும் சுபாவத்தினாலான செலவுகள் மேற்கொள்வதன் மூலம் நிறுவனங்களின் மூலதன |

| | | | |
|---|---|---|---|
| | ஒவ்வொரு நிறுவனங்களிடமிருந்து மீணடெழும் சுபாவத்தினாலான அவ்வாறெனில் கடன் மற்றும் கடன் வட்டி செலுத்துதல் மற்றும் சம்பளங்கள் மற்றும் வேதனங்களை செலுத்துவதற்காக பொது திறைசேரியிடமிருந்து விடுவிக்கப்பட்டுள்ள பணங்களின் உள்ளடங்களாகும். | ஏனைய மீண்டெழும் சுபாவத்தினாலான செலவுகளுக்காக தேவையான நிதி பங்களிப்பு பொது திறைசேரியினால் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியதாகும். | பங்களிப்புக்கள் அதிகரிப்பு ஏற்படாது என்பதுடன் முறையான திட்டமொன்று அதற்காக பின்பற்றப்பட வேண்டும். |
| (xiii) | அரச நிதிக் கூற்றின் பிரகாரம் மீளாய் வாண்டினுள் 05 பொது முயற்சிகளுக்காக ரூபா 176 மில்லியன் மூலதன பங்களிபபொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக பொதுத் திறைசேரிக்கு உரித்தான பங்குகளின் எண்ணிக்கையில் வேறுபாடொன்று ஏற்பட்டிருக்க வில்லை. | அரச கம்பனிகளில் மேற்கொள்ளப்படுகின்ற மூலதன பங்களிப்பு பிரதான பேரேட்டு கணக்குகளில் அறிக்கை படுத்துவதற்காக முன்பு இடம்பெற்ற முறைமையானது உரிய கம்பனியினால் பங்கு சான்று பத்திரம் வெளியிடும் நடைமுறைக்காக குறிப்பிட்ட காலம் செலவாவதன் காரணமாக பங்குகளின் சான்று பத்திரம் விநியோகிக்கப்படும் வரை காத்திறாமல் உரிய முதலீட்டு பங்களிப்பு மேற்கொண்டவுடன் உடனடியாக கணக்கிடுதல் நடவடிக்கைகள் இடம்பெறும். | அரசினால் மேற்கொள்ளப்படு கின்ற பங்குகளின் முதலீடுகளுக்கு உரிய சான்று பத்திரத்தை துரிதமாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (xiv) | மிஹின் லங்கா தனியார் கம்பெனியை கலைத்தல் தொடர்பாக MOF/DG/LAD/CO/142/2017 ஆம் இலக்க மற்றும் 2017 அக்டோபர் 30 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் முன்மொழிவு இலக்க (அ), (ஆ) மற்றும் (இ) காண அமப/17/2383/733/026-1 ஆம் இலக்க மற்றும் 2017 நவம்பர் 08 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானங்கள் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திறைசேரி செயலாளர் கம்பனி கலைப்பதற்கான விசேட முன்மொழிவொன்றை நிறைவேற்றி வணிக உயர் நீதிமன்றத்தின் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் நீதிமன்றத்தினால் 2018 மார்ச் 18 ஆம் திகதி கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் மக்கள் வங்கியினால், அந்த நிறுவனம் பெற்றுக்கொண்ட கடன் தவணைகள் மற்றும் வட்டி செலுத்துவதற்காக 2021 மற்றும் 2022 வருடங்களுக்காக முறையே ரூபா 272 மில்லியன் மற்றும் ரூபா 441 | மிஹின் லங்கா தனியார் கம்பனிக்கு 2021 ஆம் வருடத்துக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த மூலதன பங்களிப்பு அந்த வருடத்திலேயே உரிய பிரதான பேரேட்டு கணக்குகளில் அறிக்கை படுத்தப்பட்டிருக்கவில்லை. மூலதன பங்களிப்பு இடம்பெற்ற வருடத்திலேயே பங்குகளின் சான்று பத்திரம் வழங்கப்படாத சந்தர்ப்பங்களும் காணப்படுவதுடன் உரிய கணக்கிடுதல் நடவடிக்கைகளும் தாமதமாகி இடம்பெறுகின்றன. அதனால் இவ்வாறான தவறுகளை சீர் செய்து கொள்வதற்காக அரச கணக்கீட்டு திணைக்களத்துடன் கலந்துரையாடி பங்குகளின் சான்று பத்திரம் உரிய குறிப்பின் பிரதான பேரேட்டு கணக்குகளில் உள்ளடக்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக. | நிதியங்களைப் பெற்றுக் கொடுக்கும் போது அரசுக்கு ஏற்பட முடியுமான பாதக நிலைமையை இழிவுபடுத்திக் கொள்வதற்கும், இடம்பெறுகின்ற நிலைமைகளை முறையாக மதிப்பிடுதலுக்கு உட்படக்கூடிய வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனாக மொத்தம் ரூபா 713 மில்லியன் அந்த கம்பனிக்காக மீளாய்வாண்டிலே பொது திறைசேரியினால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | | |
| (xv) | மீளாய்வாண்டின் அரச நிதி கூற்றின் கணக்கீட்டு குறிப்புகள் 15 இன் கீழ் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ள பங்குகளின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன் பெறுமதி ரூபா 1,271,480,516 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் மீதியை உறுதிப்படுத்தும் கடிதத்தின் பிரகாரம், 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் இலங்கை அரசுக்கு உரிய ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் பங்குகளின் உரிமைத்துவம் நூற்றுக்கு 50.23 ஆக காணப்பட்டதுடன் அரச நிதி கூற்றில் அது நூற்றுக்கு 49.5 ஆக காட்டப்பட்டிருந்தது. | இதுவரையும் அந்த பங்குகள் முதலீடுகள் தொடர்பாக பங்கு சான்று பத்திரம் கிடைக்கப்பெறவில்லை. தவறுதல் ஒன்றிற்காக உரிய பங்குகளின் பெறுமதி குறிப்பிடப்படவில்லை என்பதுடன் எதிர்காலத்தில் அந்த பெறுமதியும் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உரிய சதவீதத்தை கணக்கிடும் போது ஏற்பட்ட கணக்கீட்டு பிழை ஒன்றின் காரணமாக அந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளதுடன் அதை எதிர்காலத்தில் சீர் செய்து கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | அரசின் உரிமைத்துவம் காணப்படுகின்ற நிறுவனங்களுடன் காலத்தினுடனான மீதியை உறுதிப்படுத்திக் கொண்டு கணக்குகளின் துல்லிய தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (xvi) | அரச நிதி கூற்றின் பிரகாரம் மீளாய் வாண்டினுள் அரசுக்குரித்தான வியாபாரங்களின் மூலதன பங்களிப்பின் அதிகரிப்பு ரூபா 269,386 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 228,771 மில்லியன் அவ்வாறெனில் நூற்றுக்கு 85 ஆன 2023 செப்டம்பர் 26 ஆம் திகதியுடைய அமப/23/1812/604/118-1 அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் இலங்கை மின்சார சபை மற்றும் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான கம்பனியின் ஐந் தொகை மறு சீரமைப்பு மேற்கொள்ளப்படுதலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உரிமை மூலதன முதலீடு ஒன்று காரணமாக அதிகரித்து இருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன் குறிப்பிடப்பட்டுள்ளது | அரசுக்கு உரித்தான முயற்சிகளின் அடையாளம் காணப்பட்ட பொறுப்புக்கள் அரசுக்கு பொறுப்பளிக்கப்படுவதன் காரணமாக அரசு நிதி நெருக்கடிகளுக்கு பாதிப்பு ஏற்படுவதுடன் அந்த பொறுப்புக்களை தேர்வு செய்வதற்கு முறையான நடைமுறை ஒன்றை நிருவிக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ‘‘பொதுமக்களின் அபிலாசைகளை பாதுகாத்தல்’’ என்ற பிரதான பணியின் கீழ் அரச வியாபார திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் இடம் பெறுகின்ற நிறுவனங்களின் வருடாந்த அறிக்கை குறித்த தினங்களில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல் தொடர்பாக பின் தொடர் நடவடிக்கைகள் திணைக்களத்தின் பணி ஒன்றாகும். இது தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது. | | |
| (i) | அரச வியாபார திணைக்களத்தின் மேற்பார்வைக்கு உள்ளாக கூடிய 305 நிறுவனங்கள் காணப்பட்ட போதிலும், 2024 மே 25 ஆம் தேதி ஆகும் போது பாராளுமன்றத்தின் அதிகாரபூர்வ வலைத்தளத்தின் பிரகாரம் திணைக்களத்தின் மூலோபாய ரீதியான முக்கியமாக கருதப்படுகின்ற 52 நிறுவனங்களில் 33 நிறுவனங்கள் மாத்திரம் 2022 வருடத்திற்கு உரிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் வருடத்திற்கு உரிய நிதி கூற்று தயாரித்தல் மற்றும் வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல் தொடர்பான விடயங்கள் இந்த வருடத்தின் ஆரம்பத்திலேயே குறித்த நிறுவனங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், நிறுவனத் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபை என்பவற்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு குறித்த நிறுவனங்களுக்கு அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளது. | மேற்பார்வைக்கு உட்படுகின்ற அனைத்து நிறுவனங்கள் தொடர்பாகவும் வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கும் தகவல்கள் தொடர் நடவடிக்கை படுத்தப்பட வேண்டும். |
| (ii) | 2023 ஆம் வருடத்துக்காக 2024 மே 25 ஆம் திகதி ஆகும் போது 52 பொது முயற்சிகளில் எந்த ஒரு நிறுவனத்தினதும் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | மேற்பார்வைக்கு உட்படுகின்ற அனைத்து நிறுவனங்கள் தொடர்பாகவும் வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கும் தகவல்கள் தொடர் நடவடிக்கை படுத்தப்பட வேண்டும். |
| (iii) | 2021 ஆம் வருடத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான நிறுவன கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டல் கோவையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் மதிப்பீட்டு கூட்டத்தின் போது வருடாந்த அறிக்கை | இது தொடர்பாக குறித்த அறிவுறுத்தல்கள் தொடர்ந்தும் இந்த திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. இருப்பினும் வருடாந்த செயலாற்றல் மதிப்பீட்டு கூட்டம் நடத்துதல் சம்பந்தமாக உரிய நிறுவனத்தின் பணிப்பாளர் | நிறுவனக் கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட |

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிலேயும் அது தொடர்பாக பொது முயற்சிகள் திணைக்களத்தின் தலையீடும் மிகவும் குறைந்த அளவில் காணப்பட்டது அவதானிக்கப்பட்டது. | சபையினால் பொறுப்பு கூற வேண்டும். வேண்டி உள்ளது. | |

**4. மனிதவள முகாமைத்துவம்**

**4.1 இணைக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 டிசம்பர் 31 ஆம் தேதியில் திணைக்களத்தில் காணப்பட்ட 06 பதவி வெற்றிடங்களில் சிரேஷ்ட மட்ட மேலதிக பணிப்பாளர் மற்றும் 04 பணிப்பாளர் பதவிகள், மூன்றாம் நிலை மட்டத்தில் 01 பதவியும் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 01 பதவியும் வெற்றிடமாக காணப்பட்டது. | 2023 டிசம்பர் 31 ஆம் தேதியில் உள்ளவாறு காணப்பட்ட சிரேஷ்ட மட்டத்திலான 04 வெற்றிடங்களில் இலங்கை கணக்காளர் சேவை பிரதி பணிப்பாளர்/ உதவி பணிப்பாளர் பதவி வெற்றிடங்கள் 02 காக தற்போது இரண்டு உத்தியோகத்தர்கள் சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், இலங்கை நிர்வாக சேவை பிரதி பணிப்பாளர் / உதவி பணிப்பாளர் பதவிகள் வெற்றிடங்களை நிரப்புவதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், திணைக்களத்துக்குரிய உதவி பணிப்பாளர் பதவிக்காக முறையான நடைமுறையின் பிரகாரம் பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவறை ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு தற்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br><br>அவ்வாறே, மூன்றாம் மட்டத்தில் வெற்றிடமாக காணப்படுகின்ற பதவி திணைக்களத்துக்குரிய பதவியான நிதி பகுப்பாய்வு பதவி ஒன்றாக காணப்படுவதுடன், அதற்காக சேவையை விட்டுச் சென்ற கட்டளை இடப்பட்டதன் அடிப்படையில் உரிய பதவி வெற்றிடமாக காணப்பட்டது. ஆரம்ப மட்ட உத்தியோகத்தர்கள் இலங்கை சுங்க திணை களத்திற்கு இடமாற்றம் பெற்று மற்றும் அதற்கு பதிலாக மாற்றிடானவர் வராததன் காரணமாக உரிய வெற்றிடம் ஏற்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் | தேவையான பதவியணியினரை ஆட்சேர்ப்ப நடவடிக்கை எடுக்க வேண்டியமை மற்றும் தேவையற்ற பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரினு ள் காணப்படின் அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கை திருத்தப்பட வேண்டிமை. |

| | | | |
|---|---|---|---|
| | | அதற்கான பொருத்தமான உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |
| (ஆ) | 05 இரண்டாம் மட்ட பதவிகள் மேலதிகமாக காணப்படுவதுடன் அது 04 அபிவிருத்தி உத்தியோத்தர் பதவிகள் மற்றும் 01 கணக்காளர் உதவியாளர் பதவியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | 2013.12.31 ஆம் திகதியில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் 07 உத்தியோகத்தர்கள் முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் தேசிய மற்றும் வெளிநாட்டு விடுமுறை பெற்றதன் காரணமாக திணைக்களத்தின் நடவடிக்கைகள் தடையின்றி துரிதமாக மேற்கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.<br><br>மேலும், முன்பு காணப்பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஒழிக்கப்பட்டதன் அடிப்படையில் அங்கு சேவையாற்றிய கணக்கிட்டு உதவியாளர் பெண உத்தியோகத்தர் ஒருவர் இந்த திணைக்களத்துக்கு நியமிக்கப்படப்பட்டுள்ளார். அதன் பிரகாரம் உரிய பதவிக்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக தற்போதும் முகாமைத்துவ சைவை திணை கருத்துக்கு முறையான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |